RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22496

# தண்டியலங்கார கவிராஜ மார்க்கத்தில் அணிகள் முறை வைப்பு

பி. ரம்யா [அ, *]

[அ] இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கிய பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10, இந்தியா

# Arrangement of lines on the Kaviraja Margam in Thandi Alangaram

**P. Ramya [a, *]**

[a] Department of School of Indian Languages & Comparative Literature, Tamil University, Thanjavur-613010, India

* Corresponding Author:
ramyaptu@gmail.com

Received: 21-06-2022
Revised: 07-09-2022
Accepted: 23-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

The Tamil language has five major divisions: letter, word, meaning, structure, and syllable. The fifth of these is syllable. The role of syllables in the grammatical world is also significant. The languages spoken in India are divided into four major divisions. The Dravidian language family is one of these four divisions. The first and oldest of these is Tamil. The next in line is Kannada, which is closely related to Tamil and is very special. Furthermore, when a language element is compared with other language elements, the historical nature, similarities and differences of the two languages are revealed. In this context, this article aims to explain the types of the Thandi Alangaram book structure and the Kavirajamarka book structure, the trend taken by these two books, the metaphorical syllable in the second Parichetha vocabulary, the syllable in the Kavirajamarkgam prose, the similarity and differences in the arrangement of the Thandi Alangaram and Kavirajamarkgam syllables, etc.

**Keywords:** Kaviraja, Thandi Alangaram, Letter, Word, Meaning, Structure, Syllable

## முன்னுரை

தமிழில் அணியை தொடக்க காலத்தில் தொல்காப்பியர் போன்றோர் ஒரு பிரிவாகவே கருதினர். தமிழுக்கு அடுத்தபடியாக தொன்மை உடையதாக கன்னட மொழி அமைகின்றது. இன்று வரை கன்னட மொழியில் கிடைத்துள்ள காலத்தால் முற்பட்ட முதல் நூலாக கவிராஜ மார்க்கம் உள்ளது. இது அணியிலக்கண நூல் வரிசையில் இருப்பதோடு மட்டுமின்றி, ஒரு சிறந்த இலக்கிய நூலாகவும் போற்றப்பட்டு வருகின்றது. தண்டியலங்காரம் இரண்டாம் இயலில் உள்ள பொருளணிகள் முப்பத்தைந்து கவிராஜமாக மூன்றாம் பரிச்சேத அணிகள் முப்பத்து ஆறும் முறை வைப்பு நிலையில் மாறுபட்டு உள்ளது. அவற்றை விளக்கி இவ்விரு நூல்களில் அணிகளுக்கு இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமை முதலானவற்றை ஒப்பிட விழைகிறது இக்கட்டுரை.

## அணி

செய்யுளுக்கு அழகு தந்து இன்பம் பயப்பதும், கவிதையின் கலைத்திறனை வெளிப்படுத்திக் காட்டுவதும் கவிதைக்கு உறுதுணையாக நின்று விளங்கக்கூடிய கற்பனைப் பயப்பதற்கு துணை புரிவதும் அணியே ஆகும். மேலும் அணியானது அது இடம்பெறுகின்ற இடத்திற்கு ஏற்ப பொருள் மாறுபட்டும் வரக்கூடும்.

## தண்டியலங்காரம் நூல் அமைப்பு முறை

தண்டி என்பாரால் பாடப்பெற்ற நூல் ஆதலின் தண்டியலங்காரம் என வழங்கப் பெறலாயிற்று. இது வடமொழி காவியா தர்சம் (ஏழாம் நூற்றாண்டு) நூலின் தழுவல் நூல் என்றும் தண்டியலங்காரத்தை (12 ஆம் நூற்றாண்டு) குறிப்பிடுவதுண்டு. இதன் உட்பிரிவு இயல் வைப்பு முறையில் அமைந்துள்ளது. தண்டியலங்காரம் நூற்பா யாப்பால் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலின் அமைப்பினை பின்வரும் அட்டவணை உணர்த்தும்.

| வரிசை எண் | இயல் | நூற்பா கூடுதல் |
|---|---|---|
| 1 | | சிறப்புப் பாயிரம் -1<br>தற்சிறப்பு பாயிரம் -1 |
| 2 | பொதுவணியியல் | 25 |
| | காப்பு செய்யுள் மலைமகள் வணக்கம் பொருளணியியல் | 64 |
| | சொல்லணியியல் | 35 |
| | | 124 |

செய்யுள் அல்லது இலக்கியம் முத்தகச் செய்யுள், குளகச் செய்யுள், தொகைநிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் மற்றும் பொருள் தொடர்நிலை செய்யுள் குறித்தும் செய்யுளின் இரண்டு நெறிகளான வைதருப்ப நெறி, கௌட நெறி குறித்தும் பெருங்காப்பியத்தின் விரிவான இலக்கணம், காப்பிய இலக்கணம் குறித்தும் பொதுவான கருத்துக்களை முதல் இயலான பொதுவணியியல் பேசுகிறது.

## பொருளணியியல்

இக்கட்டுரை ஒப்பீட்டுப் பகுதியான பொருளணியியலின் அமைப்பு முறை மட்டும் இங்கு விளக்கப்படுகிறது. காப்புச் செய்யுள் அடுத்து பொருளணிகளின் வகைகளுக்கான நூற்பாவில் முப்பத்தைந்துஅணிகளின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

"தன்மை உவமை உருவகம் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப்பொருள் வைப்பே வேற்றுமை விபாவனை
ஒட்டே அதிசயம் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்பம் இலேசம் நிரல்நிறை
ஆர்வ மொழி சுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயிதம் உதாத்தம்
அறிதுணர் அவநுதி சிலேடை விசேடம்.
ஒப்புமைக் கூட்டம் மெய்ப்படு விரோதம்
மாறுபடு புகழ்நிலை புகழா புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்தொடு சங்கீரணம் பாவிகம் இவை
ஏற்ற செய்யுட்கு அணி ஏழு ஐந்தே" (தண்டி,நூற்-26)

தன்மை முதல் பாவிக அணி ஈறாக முப்பத்தைந்து அணிகளை விளக்கும் இந்நூற்பாவில் சில அணி பெயர்கள் ஏகார இடைச்சொல் பெற்றும் சில அணிப் பெயர்கள் அடைமொழியோடும் வாழ்த்து என்ற அணியின் பின்னொட்டாக ஒடு வந்துள்ளதும் விகுதி கவனிக்கத்தக்கது.

ஏகாரத்தில் முடியும் ஆறு அணிகள்

1.வேற்றுப்பொருள் வைப்பு

2.பின்வருநிலை

3.முன்ன விலக்கு

4.ஒட்டு

5.பரியாயம்

6.பரிவருத்தனை

அடைமொழியோடு வரும் அணிகள்

1.அரிந்துணர், அவநுதி

2.மெய்ப்படு விரோதம்

ஒடு அடுத்துவரும் அணிகள்

வாழ்த்தொடு என்று ஒடு சேர்த்து முடிந்துள்ளதால் அதன் பிறகு இரண்டு அணிகள் சங்கீரணம் பாவிகம் வந்துள்ளன.

## கவிராஜ மார்க்க நூல் அமைப்பு முறை

இந்நூலின் மூன்றாம் பரிச்சேதத்தில், பொருள் அணிகள் பிரிவில் முதலில் நிருபதுங்கன் புகழ் பாடலுக்குப் பிறகு முப்பத்து நான்கு அணிகளின் பெயர்களைச் சுட்டிப் பிறகு, பரிச்சேதத்தின் கடைசியில் பாவிக அணியையும், தொனி அணியையும் கூறி இருக்கும் முறையானது, அணி பெயர்களை குறிக்கும் மூன்று நூற்பாவில் மூன்றாவது நூற்பாவின் கடைசியில் வாழ்த்தொடு என்று தண்டி நூற்பா போலவே அதன் பிறகு இரண்டு அணிகள் கூறப்பட்டுள்ளது.

"சாதி உருவகம் வேற்றுப்பொருள் வைப்பே
வேற்றுமை நிரல்நிறை தீவகம் உவமை
அதிசயம் ஒப்புமைக்கூட்டம் ஆட்சேபம்
சிலேடை தற்குறிப்பேற்றம் சூட்சுமம் சூத்திரம் - 2
விசேடம் சமாயிதம் சமாசம் பரியாயம்
விரோதம் அப்ரஸ்துதம் நிதரிசனம்
ஸகோக்தி சங்கீரணம் பரிவிருத்தி சூத்திரம் -3
வ்யாஜஸ் துதி ஏது விபாவனை லைவமே
உதாத்தம் அவநுதி சுவையே ஊர்ஜிதம்
வ்யா விருத்தி ஆர்வ மொழி வாழ்த்தொடு
மொழிந்திடும் அணிகள் முப்பத்து நான்காம்" சூத்திரம் 4

இச்சூத்திரத்தில் ஏழு அணிகள் மட்டும் வேறு பெயர்களில் வந்துள்ளன. அவை,

1.ஒப்புமைக் கூட்டம் (ஸத்ருஸயோகித அணி)

2. சாமசம் (ஒட்டணி)

3. அப்ரஸ்துதம் (மாறுபடு புகழ்நிலை)

4. நிதர்சனம் (காட்சி அணி)

5. ஸஹோக்தி (புணர் நிலை)

6. வியாஜஸ்துதி (புகழாபுகழ்ச்சி)

7. ஊர்ஜிதம் (தன்மேம் பாட்டுரை)

பாவிக அணி, தொனி அணி

207, 208 ஆவது சூத்திரங்களில் இவ்விரு அணிகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் அட்டவணையில் தண்டியலங்கார கவிராஜ மார்க்க அணி முறைவைப்பை விளக்குகின்றது.

அட்டவணை 1.

| வ.எண் | தண்டியலங்கார அணிகள் | கவிராஜமார்க்க அணிகள் |
|---|---|---|
| 1. | தன்மை அணி | சாதி அணி |
| 2. | உவமை அணி | 7 |
| 3. | உருவக அணி | 2 |
| 4. | தீவக அணி | 6 |
| 5. | பின்வரு நிலை அணி | - |
| 6. | முன்ன விலக்கு அணி | 10 |
| 7. | வேற்றுப் பொருள் வைப்பணி | 3 |
| 8. | வேற்றுமை அணி | 4 |
| 9. | விபாவனை அணி | 26 |
| 10. | ஒட்டு அணி | 16 |
| 11. | அதிசய அணி | 8 |
| 12. | தற்குறிப்பேற்ற அணி | 12 |
| 13. | ஏது அணி | 25 |
| 14. | நுட்ப அணி | 13 |
| 15. | இலேச அணி | - |
| 16. | நிரல் நிறை அணி | 5 |
| 17. | ஆர்வமொழி அணி | 33 |
| 18. | சுவை அணி | 30 |
| 19. | தன்மேம்பாட்டுரை அணி | 32 |
| 20. | பரியாய அணி | 17 |
| 21. | சமாயித அணி | 15 |

| | | |
|---|---|---|
| 22. | உதாத்த அணி | 28 |
| 23. | அவநுதி அணி | 29 |
| 24. | சிலேடை அணி | 11 |
| 25. | விசேட அணி | 14 |
| 26. | ஒப்புமைக்கூட்டம் அணி | 9 |
| 27. | விரோத அணி | 18 |
| 28. | மாறுபடு புகழ்நிலை அணி | 19 |
| 29. | புகழாப் புகழ்ச்சி அணி | 25 |
| 30. | நிதரிசன அணி | 20 |
| 31. | புணர்நிலை அணி | 21 |
| 32. | பரிவருத்தனை அணி | 23 |
| 33. | வாழ்த்து அணி | 34 |
| 34. | சங்கீரண அணி | 22 |
| 35. | பாவிக அணி | 35 |

## அணிகளின் வகைகளை எடுத்தாண்டுள்ள போக்கு

தண்டியலங்காரம் சாதி அணியை தன்மை அணியின் வகைகளில் ஒன்றாக குறிப்பிட, கவிராஜமார்க்கமோ ஒரு அணியாகவே கொள்கிறது. தொல்காப்பியத்தில் உவமையை தாயணியாக கொண்டு எழுந்த அணியிலக்கண வரலாறு அதன் பிறகு பல்கிப் பெருகுகிறது. எனவே தன்மையணிக்கு பிறகு தமிழ் மொழியில் இரண்டாவது இடத்தில் உவமை கொள்ளப்பட்டது. பிற அணிகளுக்கு எல்லாம் உவமையே அடிப்படை என்பதை வடமொழி அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். இக்கருத்தை அப்பைய தீட்சிதர் சித்திர மீமாம்சை என்ற நூலில்,

"உவமை என்னும் தவலருங் கூத்தி

பல்வகைக்கோலம் பாங்குறப் புனைந்து"

என்று சுட்டிக்காட்டியுள்ளார். மு வரதராசனாரோ "அணிகள் பலவற்றிற்கும் அடிப்படை உவமை அணியே ஆதலின் அதனை மட்டும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ((மு.வ அணி இலக்கணம் பி.சுந்தரம்பிள்ளை) என்று கூறியுள்ளதும், கோ.சுந்தரமூர்த்தி அவர்கள் (மொ.ஆ)

"உவமை எல்லா அணிகளுக்கும் பிறப்பிடமாக, தாயாக விளங்குகின்றது" (பண்டைத் தமிழ் இலக்கியக் கொள்கைகள்,ப.107,1997) என்று மொழிந்து உள்ளமையாலும் உவமையே அணிகளுக்கு எல்லாம் அடிப்படை எனலாம். (அணியியல் சிந்தனைகள் ப.17)

கன்னட மொழியில் உவமையை விட உருவகத்திற்கே முதலிடம் கொடுத்துள்ளதும் இரண்டாம் பரிச்சேதத்தில் உருவகத்தைப் பற்றி குறிப்பிடும் பொழுது உணர்த்தப்படுகிறது. உருவகம் வர்ணனைகளில் அடைமொழி என்ற தலைப்பில் சொல்லணி சூத்திரம் 27 - ல்,

"உருவகம் வர்ணனை வரும் வழிஒழியப்

பிறவாம் இடங்களில் திடநிலை பிறழ்ந்தே

அடுத்தடுத் துறும்படி அடைமொழி தொடுத்தல்

விலக்கிட வேண்டும்; இன்றேல் சுவைகெடும்”

என்கிறது.

## கவிராச மார்க்கம் உரைநடையிலும் அணி

தமிழ் மொழி அமைப்பில் அணியை செய்யுளுக்கு பயன்படுத்துகின்ற நிலையில், கன்னட மொழி அமைப்பில் இலக்கியத்தின் இரண்டு வகைகளான செய்யுள், உரைநடையில் ”செய்யுளைப் போலவே உரைநடையும் அணிகளைக் கொண்டுள்ளது” என்று கூறும் கவிராஜ மார்க்க இலக்கணி, உரைநடையில் “கிராய காரசம்பந்த“ அதாவது பெயர் சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் உள்ள தொடர்பு நேரடியாக ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார். (இந்திய மொழிகளின் முதல் இலக்கணம், ப. 112)

## ஒற்றுமை வேற்றுமைகள்

தண்டியலங்கார கவிராஜ மார்க்க இவ்விரு நூல்களின் அணிகள் முறை வைப்பில் தற்குறிப்பேற்ற அணியும் பாவிக அணியும் ஒரே முறை வைப்பில் உள்ளது. தமிழ் தண்டியலங்காரத்தில் உள்ள முப்பத்தைந்து அணிகளில் பின்வரு நிலையணி, இலேச அணி தவிர்த்து ஏனைய முப்பத்து மூன்று அணிகளும், கன்னட மொழியில் மட்டும் உள்ள லவம், வ்யாவிருத்தி (அந்தாதித்தொடை) தொனி அணி சேர்த்து கவிராஜ மார்க்கத்தில் முப்பத்தாறு அணிகளும் உள்ளன. நூற்பா.சூத்திர எண் அமைப்பானது தண்டியலங்காரத்தில் பொதுவணியியல் தொடர்ச்சி எண்ணாக வர கவிராஜமார்க்கத்தில் ஒவ்வொரு பரிச்சேதத்திற்கும் சூத்திரத்திற்கு முதலிலிருந்தே எண்ணிடும் முறையை வழக்கமாகக் கொண்டுள்ளது.

## முடிவுரை

தண்டியலங்கார கவிராஜ மார்க்க முறை வைப்பு நிலையில் பெரிதும் மாறுபாடு இருப்பினும் எண்ணிக்கை அமைப்பில் இவ்விரண்டு நூல்களும் ஒத்தே காணப்படுகின்றன. அணிகளின் பெயர்களைக் குறிப்பிடும் பொழுது தண்டி முப்பத்தைந்து வகைகள் என்று நேரடியாகச் சொல்லாமல் பெருக்கல் நிலையில் ஏற்ற செய்யுட்க்கு அணி ஏழு ஐந்தே எனக் குறிப்பிட, கவிராஜ மார்க்கமோ மொழிந்திடும் அணிகள் முப்பத்து நான்கு என்கின்றது. ஏகார இடைச்சொல் பெற்ற அணிகளை தண்டி ஆறு குறிப்பிட கவிராஜமார்க்கம் வேற்றுப்பொருள் வைப்பு மட்டும் தண்டியை ஒத்தும், சுவையணி கவிராஜ மார்க்கத்தில் மட்டும் வந்துள்ளது. ஒடு விகுதி இரண்டு நூலிலும் ஒத்தே காணப்படுகின்றன. அடைமொழி முறை கவிராஜ மார்க்கத்தில் இல்லை.

## References

Subash Chandrabose, S. (2020) Thandi Alangaram

Venkatachalam, (2021) Kavirajamarkgam

Karunanidhi, M. (2013) Aniyiyal sinthanaikal

Savithri, C. (2016) Indiya Molikalil Muthal Ilakanam

**Funding:** No funding was received for conducting this study.
**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License